**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.37/2024** |
| Sessions : | | | |
| Deposition of witness for : | | Prosecution : | **P.W. 1** |
| | | Defence : | **D.W.** |
| | | Court : | **C.W.** |

| **Name :** | லலிதா | **S/o.(or)W/o. :** | |
|---|---|---|---|
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **01.08.2026.**

**1 முதல் 4 மற்றும் 6 முதல் 8 குற்றம்சாட்டப்பட்டவர்கள் முன்னிலை.**

**அரசு தரப்புக்கு உதவியாக வழக்கறிஞர் திரு.G.செல்வம் முன்னிலை**

**முதல் விசாரணை:**

நான் மாங்காயிகுளத்தில் வசித்து வருகிறேன். எங்கள் குடும்பத்தில் 2 பெண்குழந்தை, ஒரு பையன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் தான் என்வீட்டுகாரரை கொலைசெய்துவிட்டார்கள். எங்கள் கொல்லைக்கு போகும் பாதையை மணிகண்டனும், அவரது குடும்பத்தாரும் 5 அடி ஆழத்திற்கு குழிதோண்டி போட்டுவிட்டார்கள். 26.06.2021ல் மணிகண்டன் குடும்பத்தாரை என்வீட்டுக்காரர் ஊர்காரரை அழைத்து சென்று கேட்டார். அவ்வாறு கேட்டதற்காக மறுநாள் 27.06.2021ம் காலை 05.30 மணி இருக்கும். என்னுடைய பிச்சங்காலை அடித்து உடைத்தனர். என்கணவரின் பிச்சங்கையையும் உடைத்துவிட்டார்கள். என்மகனுக்கு உடல்முழுவதும் அடி. இது செய்தது மணிகண்டனும் அவர் குடும்பதாரும் தான். அன்றைக்கு மணிகண்டன், நம்பிராஜா, பாலமுருகன், செல்லதுரை, பாண்டியன், நடராஜன் இவர்கள் வந்து எங்களை அடித்து காயப்படுத்தினார்கள். பக்கத்து வீட்டு

கயல்விழி என்பவர் வந்து விலக்கிவிட்டார். அவருக்கும் காயம். இதுசம்மந்தமாக குன்னம் போலிசாரிடம் என்கணவர் ராமச்சந்திரன் புகார் கொடுத்தார். அதன்பிறகு அந்த புகாரை வாபாஸ் வாங்க சொல்லி என்சின்னமகள் ரேணுகாவை செல்லதுரை, மணிகண்டன் குடும்பத்தினர் தலையில் அடித்து காயப்படுத்தினார்கள். இதுசம்மந்தமாகவும் குன்னம் போலிசில் புகார் கொடுக்கப்பட்டது. இது நடந்தது 07.04.2022 ஆகும். அதற்குபிறகு 21.05.2022ல் இந்த வழக்கை வாபஸ்வாங்க சொல்லி என்மாமியார் மாரியம்மாளை அடித்து அவரது சோத்துகாலை உடைத்தனர். அதன்பின்னிட்டு என்கணவரும், என்தம்பி பொண்டாட்டி வளர்மதியும் விதை சோளம் வாங்க அரியலூருக்கு போனார்கள். அங்கு என்கணவரை செல்லதுரை என்பவர் மொறைத்து பார்த்துள்ளார். அப்போது என்கணவர் ஏன் இப்படி முறைத்து பார்க்கிறாய் என்று கேட்டதற்கு உனக்கு 2நாள் தாண்டா வாழ்க்கை என்று சொல்லியுள்ளார். இந்த சம்பவம் நடந்தது 25.08.2022 ஆகும். அதன்பிறகு என்பெரிய மகள் துர்காதேவி சென்னையில் குடும்பத்துடன் வாழ்ந்து வருகிறார். 27.08.2022ம் தேதி என்மகள் சென்னையில் இருந்து ஊருக்கு வரும்போது நான் மதியம் 01.00 மணிக்கு டிரெயின் ஏறி மாலை 05.00 மணிக்கு என்பொன்னும், மருமகனும் அரியலூர் ரயில் நிலையத்திற்கு வந்துவிடுவதாக சொன்னார். நான், மருதைவீரன், என்கணவரும் இரண்டு இருசக்கரவாகனத்தில் என் மகளை அழைப்பதற்காக 3பேரும் வண்டியில் அரியலூர் ரெயில்வே ஸ்டேசனுக்கு சென்றோம். நான் மருதைவீரன் வண்டியில் பின்சீட்டில் அமர்ந்து முன்னாடி போய்கொண்டிருந்தோம். அப்போது என்கணவர் பின்னாடி இருசக்கரவாகனத்தில் வந்துகொண்டிருந்தார். கேஸ்குடோனுக்கு அருகில் 5கி.மீ தூரம் வரும்போது துரைமாணிக்கம் கொல்லைபக்கத்தில் வரும்போது சத்தம்கேட்டதும் உடனே நாங்கள் திரும்பி வந்தோம். அப்போது செல்லதுரை அரிவாளை வைத்துகொண்டு என்கணவரின் பின்மண்டையில் வெட்டினார். மணிகண்டன் கம்பியால் என்கணவர் தோள்பட்டையில் குத்தி, தலையில் அடித்து சாவுடா என்று கத்தினார். பாலமுருகன், நம்பிராஜா என்கணவரின்

பீச்சகாலிலும், கணுகாலிலும் கம்பியால் அடித்து இத்தோடு சாவுடா என்று சொன்னார்கள். அஜித், சிவசாமி, நம்பிராஜா 3பேரும் என்கணவரின் சோத்துகாலில் கம்பியால் அடித்து இத்தோடு சாவுடா என்று சொன்னார்கள். பின்னிட்டு என்கணவர் வந்த இருசக்கரவாகனத்தை அடித்து நொறுக்கிவிட்டு நடராஜன் ஓட்டிவந்த காரில் எல்லோரும் ஏறி சென்றுவிட்டார்கள். மணிகண்டன், செல்லதுரையும் இருசக்கரவாகனத்தில் ஏறி சென்றுவிட்டார்கள். இந்தசம்பவம் நடக்கும் போது மாலை சுமார் 04.30 மணிஇருக்கும். அதன்பிறகு நான் தடுப்பதற்காக என்வீட்டுக்காரரை நோக்கி செல்லும்போது செல்லதுரை அரிவாளை வைத்துக்கொண்டு தேவுடியா கிட்டவந்தால் உன்னையும் கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார். நானும், மருதைவீரனும் போனதுக்கு தேவுடியா உனக்கும் இதே நிலைமைதான் என்று சொல்லிவிட்டு காரிலும், இருசக்கரவாகனத்திலும் சென்றுவிட்டார்கள். நாங்கள் திகைத்துபோய் நின்றுவிட்டோம். நான் போய் பள்ளத்தில் கிடந்த வீட்டுகாரரை தூக்கிபார்த்தபோது அவர் கட்டியிருந்த கட்டம்போட்ட ஊதா கலர் கைலி, காப்பி கலர் சட்டை, சிவப்பு ஜட்டி ஆகியவகைளில் ரத்தம் படிந்திருந்தது. என்னிடம் காட்டப்படும் ஆடைகள் தான் சம்பவத்தின் போது என்வீட்டுக்காரர் அணிந்திருந்தார். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள Hero Honda வண்டிதான் என்வீட்டுக்காரர் ஓட்டிசென்றதாகும். மற்றொரு புகைப்படத்தில் உள்ள சிகப்பு கலர் வண்டியில் தான் எதிரிகள் தப்பித்து சென்றுபோனார்கள். மற்றொரு புகைப்படத்தில் உள்ள காரில் தான் எதிரிகள் தப்பித்து சென்றுபோனார்கள். அதன்பின்னிட்டு ஊர்காரர்கள் மற்றும் சுற்றிலும் இருந்தவர்கள் நான் சத்தம்போட்டதை கேட்டு வந்தார்கள். நான் சுமார் 10, 15 அடி தூரத்தில் தான் சம்பவத்தை பார்த்தேன். என்வீட்டுக்காரரை தூக்கி ஆம்புலன்சில் ஏற்றி அரியலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பினார்கள். நான் ஆம்புலன்சில் உடன் சென்றேன். அதன்பிறகு ஆஸ்பத்திரியில் என்வீட்டுக்காரை சேர்த்துவிட்டு நானும், என்மகளும் குன்னம்

காவல்நிலையத்திற்கு சென்று புகார் வாக்குமூலத்தை நான் சொல்லசொல்ல என்மகள் ரேணுகாதேவி எழுதினார். அந்த புகார் தான் என்னிடம் காட்டப்படுவது. அது அ.சா.ஆ.1, அதில் இருப்பது என்னுடைய கையெழுத்து தான். புகார் கொடுத்துவிட்டு நான் அரசு மருத்துவமனைக்கு திரும்ப வந்துவிட்டேன். அதன்பிறகு போலிசார் என்னை விசாரித்தார்கள். எனகணவர் சம்பவஇடத்திலேயே இறந்துவிட்டார். பிறகு போஸ்மாட்டம் செய்து மறுநாள் மதியம் 03.00 மணிக்கு பிரேதத்தை கொடுத்தார்கள். சம்பவத்திற்கு முன்பு ஜெகநாதன், மணிகண்டன், பாலமுருகன் ஆகியோர்கள் அரியலூர் செல்லதுரையின் செல்போன் கடையில் இவன வேலை முடித்தால் தான் நம்ப நிம்மதியா இருக்கலாம் என்று பேசிகொண்டு இருந்ததாக என்நாத்தனார் மகன் விஜயகுமாரும், சின்னதுரையும் அங்கு போனபோது கேட்டு என்னிடம் சொன்னார்கள். அதன்பிறகு திட்டம் போட்டு சதிபண்ணி என்வீட்டுக்காரரை கொலை செய்தார்கள். பிறகு குன்னம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் சென்று வாக்குமூலம் கொடுத்து நீதிபதி அதை பதிவுசெய்துகொண்டார். என்னிடம் காட்டப்படும் வாக்குமூலம் தான் அது. அதில் என்கையெழுத்து உள்ளது. அது அ.சா.ஆ.2, போலிசார் என்னை இருமுறை விசாரித்தார்கள். எங்களுக்கு சாட்சி சொல்ல வருபவர்களை செல்லதுரை குடும்பத்தார் மிரட்டுகிறார்கள். என்னிடம் காட்டப்படும் அரிவாள் தான் என்வீட்டுக்காரரை வெட்ட பயன்படுத்தியது. அது சா.பொ.1, இரும்பு கம்பிகள் எண்ணிக்கை 6 சா.பொ.2,

**<u>குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

புகாரை நான் சொல்லசொல்ல என்மகள் எழுதினார் என்பதை போலிசார் விசாரணையிலும், நீதித்துறை நடுவர் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். சம்பவதேதிக்கு 2நாள் முன்பு விஜயகுமார், சின்னதுரையும் பேசிக்கொண்ட விவரத்தை நான் இந்த நீதிமன்றத்தில் தான் முதன்முதலாக சொல்கிறேன். என்கணவர் சென்ற வண்டியின் பதிவுஎண் புகாரில் நான் சொல்லியுள்ளேன். நான் 2, 3 ம்வகுப்பு வரை தான் படித்துள்ளேன். என்கணவர் சென்ற வாகனத்தின் பெயர், பதிவுஎண் ஆகியவை புகாரில் இல்லை என்றால் அது

என்னுடையது அல்ல என்றால் சாட்சி சரியல்ல. அது என்புகார் என்று சொல்கிறார். எதிரிகள் சென்ற கார் மற்றும் காரின் பதிவுஎண்களை புகாரில் சொல்லவில்லை. என்வீட்டிலிருந்து சுமார் 20 வீடுகள் தள்ளி எதிரிகள் வீடுகள் உள்ளது. எங்கள் ஊரிலிருந்து அரியலூர் சுமார் 5 கி.மீ தூரம் இருக்கும். எங்கள் ஊருக்கும் அரியலூருக்கும் இடையே ரசாலபுரம், ராமலிங்கபுரம் ஆகிய ஊர்கள் உள்ளது. ரசாலபுரத்திற்கும் ராமலிங்கபுரத்திற்கு இடையில் வீடுகளும், கடைகளும் கிடையாது என்றால் சரிதான். சம்பவம் நடந்தது அரியலூருக்கும் ராமலிங்கபுரத்திற்கும் இடையில் நடந்தது. சம்பவஇடத்தில் வாகனங்களோ , ஆட்களோ போனாலும், வந்தாலும் தெரியும் என்றால் சரிதான். எதிரிகள் சென்ற இருசக்கரவாகனத்தையோ, காரையே நாங்கள் முன்னால் பார்க்கவில்லை. அவ்வாறு சாலையின் இருபுறத்திலும் முன்னும், பின்னும் யாரும் நடந்து செல்லவில்லை. என்முன்னாலும், இடதுபுறத்திலும், வலதுபுறத்திலும் யார் சென்றாலும் தெரியும். சத்தம்கேட்டு திரும்பி பார்க்கும்வரை எதிரிகளையோ, இருசக்கரவாகனம் மற்றும் காரையோ நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவம்நடந்த இடத்திற்கும் என்வீட்டிற்கும் சுமார் 2, 2 1/2 கி.மீ தூரம் இருக்கும். ஊர்காரர்கள் சம்பவஇடத்திற்கு வரும்வரை இறந்துபோன என்கணவரை எடுத்து செல்ல முயற்சி பண்ணவில்லை என்றால் சரிதான். சம்பவம் முடிந்தபிறகு ஊர்கார்கள் சுமார் 20, 30 பேர்கள் வந்தார்கள். அவர்கள் எப்படி வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. எனக்கும், மருதைவீரனுக்கும் எந்த காயமும் இல்லை. நாங்கள் சென்ற வாகனமும் எந்த சேதமும் இல்லை. என்கணவருக்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் நீண்ட நாள் பகை உண்டு என்றால் சரிதான். 3வழக்குள் எதிரிகள் மீது கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்குகளில் இந்த 9 எதிரிகள் தான் மாற்றி மாற்றி வருவார்கள் என்றால் சரிதான். தற்போது நடராஜன், செல்லதுரை, பாலமுருகன் ஊரில் இல்லை. அவர்கள் சென்னையில் இருக்கிறார்கள். என்கணவர் மேல் மணல்கடத்தல், சாரயகேஸ், கற்பழிப்பு வழக்கு உண்டு என்றால் சரியல்ல. என்வீட்டில் இருந்து

மேற்கே கலைசெல்வி என்ற பெண் உள்ளதா என்றால் சரிதான். அவர் என்கணவர் மீது கற்பழிப்பு வழக்கு கொடுத்து அது நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. என்கணவர் மீதோ அல்லது என்மீதோ போலிசார் எந்த நடவடிக்கையும் எடுக்கமாட்டார்கள் என்றால் சரியல்ல. எங்கள் குடும்பம் அரசியல் செல்வாக்கு உள்ள குடும்பம் என்றால் சரிதான். முன்னாள் அமைச்சருக்கு நாங்கள் உறவினர் என்றால் சரியல்ல. என்மகள் சம்பவதேதியன்று வைகை எக்ஸ்பிரஸ் சென்னையிலிருந்து மதியம் 01.00 க்கு புறப்பட்டு மாலை 07.00மணிக்கு வரும் என்றால் சரியல்ல. 05.00, 05.30 க்கு வந்துவிடும். என்மகள், என்மருமகன் வரும்விசயம் என்குடும்பத்தாருக்கும் சொந்தகாரர்களுக்கும் தெரியும். எதிரிகள் அரியலூர் வரவேண்டும் என்றால் எங்கள் வீட்டை தாண்டி தான் வரமுடியும். எதிரிகளை சம்பவஇடத்தில் பார்த்தது தவிர வேறு எங்கும் அன்றைய தினம் பார்க்கவில்லை. எதிரிகள் அரியலூர் வந்தாலே அவர்களை ஆட்களை வைத்து அடிப்பது என்கணவரின் பழக்கம் என்றால் சரியல்ல. நாங்கள் சென்ற வாகனத்தை போலிசாரிடம் நான் ஒப்படைக்கவில்லை. என்கணவர்சென்ற வாகனத்தை போலிசார் அதே நாளில் கைப்பற்றினார்கள். சம்பவஇடத்தில் சத்தம்போட்டால் ராமலிங்கபுரம் மற்றும் ரசாலபுரத்திற்கு கேட்காது என்றால் சரிதான். என்கணவர் பெயரில் நிறைய புகார்கள் உள்ளது என்று அதை மறைத்து விட்டு எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவஇடத்தில் நானும், மதுரைவீரனும் இல்லை என்றால் சரியல்ல. என்கணவர் வெட்டுபட்டு கீழே கிடக்கும்போது மருத்துவமனை தூக்கிசெல்லும்முன்பே போலிசார் சம்பவஇடத்திற்கு வந்துவிட்டார்களா என்றால் எனக்கு அது தெரியாது. சம்பவஇடத்திற்கு போலிசார் வந்தபிறகு தான் என்கணவரை மருத்துவமனைக்கு எடுத்துசென்றார்கள் என்றால் எனக்கு தெரியாது. அரசு மருத்துவமனைக்கு போனபிறகுதான் போலிசார் வந்தார்கள். இறந்துபோனவரை அரசு மருத்துவமனைக்கு எடுத்துசெல்லும்போது போலிசார் யாரும் வரவில்லை. சம்பவஇடத்திற்கு என்மகள் ரேணுகாதேவி எல்லோரும் வரும்போது வந்தார்.

நாங்கள் அனைவருமே சம்பவம் முடிந்து போலிசார் வந்தபிறகு தான் சம்பவஇடத்திற்கு வந்தோம் என்று சொன்னால் அது சரியல்ல. புகாரில் சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றும், போலிசார் எழுதிகொடுத்தில் நான் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அரியலூர் அரசு மருத்துவமனையிலிருந்து குன்னம் காவல்நிலையம் சுமார் 20 கி.மீ தூரும் இருக்கும். நான் மாலை 06.00, 06.30 மணிக்கு நான் குன்னம் காவல்நிலையம் சென்றேன். 05.30 , 06.00 மணிக்கு அரசு மருத்துவமனைக்கு போய்விட்டோம். நான் பிறகு கார்பிடித்து குன்னம் காவல்நிலையம் சென்று புகார்கொடுத்தேன்.

**மறுவிசாரணை**: இல்லை

Sd/-Dr. Sathiyamurthy,
Principal District Judge,
Perambalur.